அனுப்புநர்

மாவட்ட ஆட்சியர்,
விருதுநகர் மாவட்டம்,
விருதுநகர்.

பெறுநர்

மாவட்ட சமூக நல அலுவலர்,
விருதுநகர் மாவட்டம்,
விருதுநகர்.

ந.க.அ5/33375/2021, நாள்:- 29.09.2021.

பொருள் :- பொதுப்பணியாளர்கள் - சங்கக் கோரிக்கைகள் - விருதுநகர் மாவட்டம் - தமிழ்நாடு கிராம நிருவாக அலுவலர் சங்கத்திலிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனு மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல் - தொடர்பாக.

பார்வை :- விருதுநகர் மாவட்ட மையம் தமிழ்நாடு கிராம நிருவாக அலுவலர் சங்கத்திலிருந்து வரப்பெற்ற மனு நாள்: 28.08.2021.

()()()()

பார்வையில் கண்டுள்ளவாறு தமிழ்நாடு கிராம நிருவாக அலுவலர் சங்கத்தின் விருதுநகர் மாவட்ட மையம் சார்பாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வரப்பெற்ற கோரிக்கை மனுவில், தீர்மானம் எண். 7-இல் கீழ்கண்டுள்ள தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் அனைத்து வருவாய்த்துறை சான்றுகளும் இணையம் மூலம் வழங்கும் நடைமுறை உள்ளது. இந்நிலையில் முதல் திருமண சான்று மட்டும் கிராம நிருவாக அலுவலர்கள் மட்டும் கையால் எழுதி வழங்கி வருகின்றனர். இதனால் திருமனம் தொடர்பான நீதிமன்ற வழக்குகளில் கிராம நிருவாக அலுவலர்கள் முதல் திருமண சான்று வழங்குவது கேள்வி எழுப்பப்பட்டு, கண்டிக்கப்பட்டனர். ஆனால் திருமணம் முடிந்த பின்பு முதல் திருமண சான்று கோரி கிராம நிருவாக அலுவலர்களை பொதுமக்கள் முற்றுகையிடுகின்றனர். எனவே முதல் திருமண சான்று திருமணம் முடிந்த நபர்களுக்கு வழங்குவதற்கு பழைய முறையில் கிராம நிருவாக அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர் மற்றும் வட்டாட்சியர் கையொப்பமிட்டு வழங்குவது ஒரிரு மாவட்டங்களில் நடைமுறையில் உள்ளது. இவ்வாறான முறையில் நமது மாவட்டத்தில் கிராம நிருவாக அலுவலர்களும் வழங்குவதற்கு பொதுமக்களால் மிகவும் நிர்பந்திக்கப்படுகின்றனர். நிர்பந்தத்தின் அடிப்படையில் கிராம நிருவாக அலுவலர்கள் வட்டாட்சியர் அலுவலகம் மூலம் முதல் திருமண சான்று வழங்க பரிந்துரை செய்தால் அதனை வட்டாட்சியர்கள் ஏற்பதில்லை. இதனால் கிராம நிருவாக அலுவலர்களுக்கு மிகுந்த சிக்கலும் மன உளைச்சலும் ஏற்படுகிறது. எனவே மாவட்ட நிருவாகம் முதல் திருமண சான்று தொடர்பாக ஒரு தெளிவான வழிகாட்டுதல் உத்தரவு வழங்கக் கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்நேர்வில் திருமணம் செய்து கொள்ளும் நபர்கள் அரசால் திருமணத்திற்கு வழங்கப்படும் நலத்திட்டங்களில் பயன்பெறும் வகையில் திருமணமாகவில்லை என்ற சான்று இணையதளம் மூலம் வழங்கப்படுகிறது. திருமணத்திற்கு பின்பு அவ்வாறு முதல் திருமண சான்று வழங்குவதற்கு அரசால் வரையறை ஏதும் செய்யப்படவில்லை. எனவே அரசு வழங்கும் (மூவலூர் இராமாமிர்தம்மாள் திருமண உதவித்தொகை போன்ற) நலத்திட்டங்களில் பயன்பெறும் பயனாளிகள் இணையவழி அல்லாத சான்றுகள் சமர்ப்பிப்பதைத் தவிர்த்து, இணையதளம் மூலம் வழங்கப்படும் சான்றுகளை மட்டும் சமர்ப்பிக்க அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(ஒம்)வீ. கிருஷ்ணவேணி,
மாவட்ட ஆட்சியருக்காக,
தனித்துணை ஆட்சியர்(ச.பா.தி),
விருதுநகர்.

// ஆணைப்படி //

29/09/2024

அலுவலக மேலாளர் (பொது)

29/9/2024

நகல் :-

திரு.கே. முருகேசன்,
மாவட்டத் தலைவர்,
தமிழ்நாடு கிராம நிருவாக அலுவலர்கள் சங்கம்,
விருதுநகர் மாவட்ட மையம்,
608/6-5எ, பாரதிதாசன் தெரு,
லெட்சுமி நகர்,
விருதுநகர் - 626 001.